
# தேவனிடத்தில் ஐசுவரியம்

**தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங் களைச் சேர்த்துவைக்கிறவன் (லூக்கா 12:21)**




நாம் ஐசுவரியவான்களாய் இருப்பது தேவனுடைய சித்தம். ஆனால் எவற்றை நாம் ஐஸ்வர்யமாக கருதுகிறோம் என்பதே முக்கியம். மேற்கண்ட வேத வசனம் தெளிவாகக் கூறுகிறது நாம் தேவனிடத்தில் ஐசுவரியவான்களாய் இருக்க வேண்டும் என்று. **2 கொரிந்தியர் 8:9** கூறுகிறது **"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே."**. ஆம் இங்கு அவர் ஐஸ்வர்யம் உள்ளவராய் இருந்தார் என்றும், அந்த ஐஸ்வர்யத்தை நாம் பெறும்படியாய், நமது நிமித்தம் தரித்திரரானார் என்றும் வேத வசனம் தெளிவாகக் கூறுகிறது. இங்கு அவர் எவற்றில் எல்லாம் ஐஸ்வர்யவானாய் இருந்தாரோ, அவ்வற்றில்லெல்லாம் நாம் ஐஸ்வர்யவான்களாய் இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அதற்காகத்தான் அவர் தரித்திரத்தை ஏற்றுக் கொண்டார். பாவ சிலுவையை ஏற்றுக் கொண்டார். ஆம் அவர் ஐஸ்வர்யவானாய் இருந்தார் என்பது, அவர் தேவனிடத்தில் ஐஸ்வர்யம் உள்ளவராய் இருந்தார் என்பதாகும். முதலாவது அவர் தேவகுமாரனாய் தேவனுக்குரிய அனைத்திற்கும் உரிமையாளராய் இருந்தார். அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்க புத்திர சுவிகாரம் உடையவராய் இருந்தார். நாமும் அப்படிப்பட்ட ஈவை பெறும்படியாய், சர்வ வல்லமையுள்ள தேவனை அப்பா

பிதாவே என்று கூப்பிடத்தக்க புத்திர சுவிகாரம் உடையவர்களாய் மாறுவதற்காகவே அவர் தம்மைத் தாமை ஒப்புக்கொடுத்தார். எனவே நாம் பெறவேண்டிய முதல் மற்றும் மிக முக்கியமான ஐஸ்வர்யம், தேவப்பிள்ளை என்ற முத்திரையை ஆவியானவரின் மூலமாக பெறுவதே ஆகும். இவ்வுலக வாழ்விலும் நித்திய வாழ்விலும் நமக்கு ஐஸ்வர்யமாய் ஆதாரமாய் இருக்க வேண்டியது தேவபிள்ளை என்ற அங்கீகாரம் மாத்திரமே. அந்த அங்கீகாரம் மற்ற அனைத்தையும் நமக்கு கூடப் பெற்றுத் தரும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவகுமாரனாய் எவற்றில் எல்லாம் ஐஸ்வர்யவானாய் இருந்தார் என்பதை நாம் பின்வருமாறு தியானிப்போம். அவ்வற்றில் நாமும் பெருகியிருந்தால் மாத்திரமே, நாமும் தேவனுடைய ஐஸ்வர்யத்தை உடைய தேவ பிள்ளைகள் என்ற அங்கீகாரத்தை பெறுவோம்.

**யோவான் 1: 14** கூறுகிறது **“அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.“**. இங்கு அவர் தேவ வார்த்தையாகிய சத்தியத்தாலும், தேவ கிருபையினாலும், தேவ மகிமையினாலும் தம்மைத் தாமே தேவகுமாரனாய் வெளிப்படுத்தினார் என்பதை காணலாம். மேலும் **லூக்கா 8:46** இல் **“அதற்கு இயேசு: என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார்.“**. ஆம் அவர் தேவ வல்லமையால் நிறைந்திருந்தார். மேலும் **யோவான் 1:16** கூறுகிறது **“அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபைபெற்றோம்.“** என்று. ஆம் அவரிலிருந்த பரிபூரணமான தேவ கிருபை, தேவ வல்லமை, தேவ வார்த்தை, தேவ மகிமை நம் எல்லோருக்கும் தேவ ஐஸ்வர்யமாய் கொடுக்கப்பட்டது. எனவே தேவனுடைய பார்வையில் பொக்கிஷமாக ஐஸ்வர்யமாக காணப்படுகிறவைகள் இப்படிப்பட்டவைகளே. அவருக்குரியவர்களாய் இருக்கும் நம்மிடத்திலும் தேவன் எதிர்பார்ப்பது இப்படிப்பட்ட ஐஸ்வர்யத்தை உடையவர்களாக இருப்பதே ஆகும்.

ஒருவேளை பூமிக்குரிய பார்வையில் தரித்திரராய் சிலர் காணப்பட்டாலும், குறைவுகள் உடையவர்களாக சிலர் காணப்பட்டாலும், அவர்களிடத்தில் தேவனுடைய ஐஸ்வர்யம் இருக்குமாகில் அவர்களே தேவனுடைய பார்வையில் ஐஸ்வர்யவான்கள். ஆனால் அதே நேரத்தில் அழிந்து போகும் பொன், வெள்ளி, மற்றும் மிகுதியான மற்ற செல்வங்களையும் இவ்வுலகில் ஒருவன் பெற்றிருந்தாலும், அதை தேவ திட்டத்தின்படி, தேவ

ஐஸ்வர்யத்தோடு சேர்த்து, உலக ஐஸ்வர்யங்களை சரியாக பயன்படுத்தாவிட்டால், அவனது உலக ஐஸ்வர்யங்களால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அப்படிப்பட்டவர்களை ஆண்டவர் மதிகேடர் என்கிறார் (லூக்கா 12:20). ஆம் தேவனிடத்தில் ஐஸ்வர்யவானாயிராமல், தனக்காகவே இவ்வுலக பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறவன் மதிகேடனாய் இருக்கிறான் (லூக்கா 12:21). தேவன் தரும் ஆவிக்குரிய ஐஸ்வர்யங்களானாலும், பூமிக்குரிய ஐஸ்வர்யங்களானாலும், நாம் அதை நமக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனபடும்படியாக உபயோகிக்கும் பொழுது, அது தேவப்பார்வையில் நீதியாய் காணப்படுகிறது.

ஆம் ஆண்டவர் நமக்கும் தந்திருக்கும் அவருடைய கிருபை, வல்லமை, கனிகள், வரங்கள் என அனைத்தையும், நமக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனபடும்படியாய் உபயோகிக்க வேண்டும். இதையே நாம் ஐந்து தாலந்து, இரண்டு தாலந்து மட்டும் ஒரு தாலந்தை பெற்றவர்களின் உவமையில் காண்கிறோம் (மத்தேயு 25:14-30). அதே நேரத்தில் இவ்வுலக ஆஸ்திகளையும், நாம் தேவையுள்ளோருக்கு பகிர்ந்து கொடுக்க ஆண்டவர் எதிர்பார்க்கிறார். சகேயுவின் வாழ்க்கையில் இதுவே நடந்தது. ஆண்டவர் இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்று கூறி, இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாய் இருக்கிறானே என்றார் (லூக்கா19:9). மேலும் தேவ ஆலயத்தில் காணிக்கைப் பெட்டியில் ஏழை விதவைப் போட்ட காணிக்கையையும் ஆண்டவர் இவ்வாறே பார்த்தார் (லூக்கா 21:1-4). தன்னை பின்பற்றும்படியாய் வந்த ஐஸ்வர்யவானாகிய வாலிபனிடத்திலும், இதையே எதிர் பார்த்தார். ஆனால் அவனோ, அதை செய்ய இயலாதவனாய் திரும்பி போனான்.

**லூக்கா** 12:33,34 வசனங்கள் கூறுகிறது **"உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள், பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்."** என்று. ஆம் நாம் எதை பொக்கிஷமாக நினைக்கிறோமோ, அங்கு நம் இருதயமும் இருக்கும். ஆண்டவர் எதிர்பார்ப்பதெல்லாம் நம்முடைய இருதயம் அவருக்கேற்றதாய் இருக்க வேண்டும் என்பதே. அதனால் தான் ஆதி அப்போஸ்தல திருச்சபையில், **"விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள்." (அப்போஸ்தலர் 2:44,45).**

**“சீப்புருதீவானும் லேவியனும் அப்போஸ்தலராலே ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர்பெற்றவனுமாகிய யோசே என்பவன், தனக்கு உண்டாயிருந்த நிலத்தைவிற்று, அதின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.“ (அப்போஸ்தலர் 4:36,37)**. ஆனால் அதே நேரத்தில் தேவ ஐஸ்வர்யத்தை பெற்றும், உலக ஐஸ்வரியத்தை விட முடியாமல் போன அனனியா மற்றும் சப்பீராளின் நிலைமை பரிதாபமாய் முடிந்தது **(அப்போஸ்தலர் 5:1-10)**. ஆண்டவரை காட்டிக்கொடுத்த யூதாஸ் ஸ்காரியோத்தும், ஆண்டவர் தனக்கு தந்த அருமையான அப்போஸ்தலன் என்கிற ஆவிக்குரிய பொக்கிஷத்தை, வெறும் 30 வெள்ளி காசு எனும் இவ்வுலக ஐஸ்வரியத்துக்காக இழந்து போனான். **அப்போஸ்தலர் 1:24** கூறுகிறது **“எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும்“**. ஆம் அருமையான பொக்கிஷமாகிய அப்போஸ்தல பட்டத்தை, அவன் இழந்து போனான். இன்று வாழும் நமக்கு இது ஒரு பாடமாய் உள்ளது.

எனவே நாம் தேடி சேர்க்க வேண்டிய முதலாவது காரியம், தேவ ஐஸ்வர்யத்தையே. அதே நேரத்தில் அந்த ஐஸ்வரியத்தை நாம் தேவ நாம மகிமைக்காக பிரயோஜனப்படுத்தவும் வேண்டும். மேலும் உலக ஐஸ்வர்யத்தையும் ஆண்டவர் நமக்கு கொடுக்கும் பொழுது, அதையும் நாம் அவர் நாம மகிமைக்காகவே பயன்படுத்தும் பொழுது, சகல நன்மையும், ஐஸ்வரியமும், நமக்கு சம்பூரணமாயிருக்கும். ஆமென், அல்லேலுயா.